ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
வேலூர் மாவட்டம்
கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ந.க.எண்.1171/மாஒ/பசெகு/ஒபக/2023, நாள். 27.07.2023.

பொருள் : வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி 2023–2024 ஆம் ஆண்டு – 6 முதல் 18 வயதுடைய பள்ளி செல்லா (Never Enrolled) / இடைநின்ற குழந்தைகள் (மாற்றுத்திறனுடைய குழந்தைகள் மற்றும் இடம்பெயர்ந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகள் உட்பட) கண்டறிவதற்கான கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளுதல் – வழிகாட்டு நெறிமுறைகள் – சார்பு.

பார்வை : மாநிலத் திட்ட இயக்குநர் (ஒபக), சென்னை–6 அவர்களின் கடித ந.க.எண்.1587/சி7/சிறப்புப்பயிற்சி/ஒபக/2023, நாள். 26.07.2023.

*********

1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையில் 100% மாணவர் சேர்க்கையை உறுதிப்படுத்துவதற்காக தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் முக்கியமான உட்கூறுகளில் ஒன்று பள்ளி செல்லா / இடைநின்ற குழந்தைகளுக்கான சிறப்பு பயிற்சி தலையீடுகள் ஆகும்.

ஒவ்வொரு ஆண்டும் 6 முதல் 18 வயதுடைய பள்ளி செல்லா / இடைநின்ற குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனுடைய குழந்தைகளைக் கண்டறிய சிறப்புக் கணக்கெடுப்பு பணி நடத்தப்படுகிறது. இதில் கண்டறியப்படும் குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ் சிறப்புப் பயிற்சி மையங்கள் மூலம் கல்வி வழங்கப்பப்பட்டு வருகிறது. இது ஒரு தொடர் பணியாகும்.

6–18 வயதுடைய பள்ளி பள்ளி செல்லா / இடைநின்ற குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனுடைய குழந்தைகளைக் கண்டறிய சிறப்புக் கணக்கெடுப்பு பணி மேம்படுத்தப்பட்ட கைப்பேசி செயலியை பயன்படுத்தி பார்வையில் காணும் மாநிலத் திட்ட இயக்குநர் (ஒபக) அவர்களின் செயல்முறைகளில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளுமாறு அனைத்து அலுவலர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்.

இணைப்பு –
பார்வையில் காணும் செயல்முறைகள்.

பெறுநர் –
1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை/தொடக்கக் கல்வி/தனியார் பள்ளி), வேலூர் மாவட்டம்.
2. அனைத்து அரசு தொடக்க / நடுநிலை / மேல்நிலை / உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள். (உரிய வழியாக)
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
4. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ) , வேலூர் மாவட்டம்.
5. அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்கள் (உரிய வழியாக) , வேலூர் மாவட்டம்.

நகல் – முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
நகல் – திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், வேலூர். – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.

D:\OFFICE SS\DC5 OSC\OSC 2023-24\OSC Survey 2023-24 Reg VLR Collector Office Note.doc